## 7.1: Institutional Values and Social Responsibilities

7.1.1 Measures initiated by the institution for the promotion of gender equity during the academic year 2022-2023

**PRESS CLIPPINGS and VIDEOS IN MEDIA**

**NSS SPECIAL CAMP AT KARGUDI, THE NILGIRIS**



உதகை குரல்  வியாழக்கிழமை  9.2.2023

**எமரால்ட் ஹைட்ஸ் மகளிர் கல்லூரி மாணவிகள் சார்பாக நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம்**

நீலகிரி, பிப்.9-

நீலகிரி மாவட்டம்,உதகை ,எமரால்ட் ஹைட்ஸ் மகளிர் கல்லூரி மாணவிகள் சார்பாக நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமானது நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் முனைவர் அ.ரோசில்டா மஞ்சு மற்றும் விலங்கியல் துறை பேராசிரியை முனைவர் தனலட்சுமி ஆகியோர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது . மசினகுடியில் உள்ள கார்குடி கிராமத்தில் 27/1/2023 முதல் 02/2/2023 வரை நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 53 நாட்டு நலப்பணி திட்ட மாணவத்தொண்டர்கள் கலந்து கொண்டு யானைப்பாடி, தேக்பாடி, லைட் பாடி கிராமங்களில் வாழும் பழங்குடியினரின் வாழ்க்கை முறை மற்றும் அவர்களது தேவைகள் குறித்து ஆய்வு நடத்தினர்.இம்முகாமில் ஏராளமான ஆசிரியர்களும் மாணவிகளும் கலந்து கொண்டு முகாமினை சிறப்பித்தனர்.

**PLUS TWO STUDENT VISIT TO EMERALD HEIGHTS COLLEGE UNDER NAAN MUDHALVAN SCHEME**



உதகை குரல்

உதகை எமரால்டு ஹைட்ஸ் மகளிர் கல்லூரியில்
**பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு நேர்முக விளக்க காட்சி**

நீலகிரி, மார்ச்.3-

தமிழக அரசின் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் எல்லா மாவட்டங்களில் உள்ள அரசு பள்ளிகளில் பயிலும் 12 ஆம் வகுப்பு மாணவ மாணவிகள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கு நேர்முக விளக்க காட்சி களப்பயணமாக சென்று வர அறிவுறுத்தபட்டது. அதன்படி நீலகிரி மாவட்டத்திலும் எல்லா அரசு பள்ளிகளில் பயிலும் 12 ஆம் வகுப்பு மாணவ மாணவிகள் அங்குள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கு நேர்முக விளக்க காட்சி களப்பயணமாக அனுப்பபட்டனர்.

அதன் ஒரு பகுதியாக உதகை எமரால்டு ஹாட்ஸ் மகளிர் கல்லூரியிலும் அரசு பள்ளிகளில் பயிலும் 24 பன்னிரண்டாம் வகுப்பு மாணவியர் மற்றும் 8 ஆசிரியைகள் அரசு நேர்முக விளக்க காட்சி களப்பயணமாக சென்றனர். அவர்களுக்கு கல்லூரி வளாகத்தில் பூங்கொத்து கொடுத்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் கி. சுஜாதா தலைமை உரையாற்றி உயர் கல்வியின் சிறப்பினை திறம்பட விளக்கினார். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் பேராசிரியை முனைவர் அ. ரோசில்டா மஞ்சு சிறப்புரை ஆற்றி கல்லூரியின் சிறப்பம்சங்களை விவரித்தார். பள்ளி மாணவிகள் கல்லூரியின் அனைத்து துறைகளுக்கும் சென்று பார்வையிட்டனர். இறுதியில் கல்லூரி மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

**LINKS**

https://youtu.be/tjjhieQUfL0

https://youtu.be/m3jQKWbgiGg

https://youtu.be/h3iIZte2LZQ

https://youtu.be/5MuJe1kdM_c

https://youtu.be/5MuJe1kdM_